சுக்ல யஜுர் வேதத்தில்

வாஜஸநேய ஸம்ஹிதையில் உள்ள

# ஈசாவாஸ்யோபநிஷத்தும்

ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத் பாதாசாரிய ஸ்வாமிகள்
இயற்றிய பாஷ்யமும்.

இவை

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீமத்-ஸ்ரீ

காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகளால்

மொழி பெயர்க்கப்பட்டு

காளையார் கோவில் மடாதிபதி

ஸ்ரீமத்-ஸ்ரீ

அருணாசல சுவாமிக ளவர்கள்

கேட்டுக் கொண்டபடி

கோவிலூர் மடாதிபதி

ஸ்ரீமத்-ஸ்ரீ

மஹாதேவ ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்கள்

பொருளுதவி பெற்றன.

சென்னை

ஹிந்தி பிரசார பிரஸில் அச்சியற்றப் பெற்றன

1929

உ

சிவமயம்

ஓம் தத் சத் பாப்ரஹ்மணே நம:

## பாயிரம்.

அருண்மிகும் வீர சேகர விறைவ
னருளினு லேசுருவே தத்தின்
பொருளினை விளக்கும் ஞாநகாண் டமதாய்ப்
பொருந்துமீ சாவாசி யத்தைத்
தெருளுறு சங்கர விறைசொல்பா டியந்தான்
சேரவே செந்தமிழ் மொழியில்
இருளினைப் போக்கு மன்பர்கள் விரும்ப
விசைத்தனன் காசிகா நந்தன்.

## காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்

இயற்றிய

# மஹாத்ம சரிதாமிருதத்தில் உள்ள

# ஸ்துதிகள்.

---

கருவலி களையு மிபமுகன் றன்னைக் கதிர்வடி வேலனை
யடுத்தோ, ரிருமல வாநி யீசுரன் றன்னை யிணையில்கா மாட்சியைச்
சிறந்த, திருவுரு துங்க பத்திரை புரக்குஞ் சிருங்கைவாழ் செகத்குரு
வென்னும், பரனுரு வான சங்கர பகவற் பாதவா சிரியனைப்
பணிவாம். 1

நாவலர் பரவுஞ் சமிநிழ லமரு நாயக னளிநநன் மலரை,
மாவெழி லாறு முகன்றனைக் கொற்ற வாளிறைதிருநெலை யமையை,
யிவநல் லன்பு மிகுந்துவந் தடைந்தோர்க் கருளொடு ஞாநம தளித்
துக், கோவிலூ ரினில்வாழ் முத்திரா மேச குருபரன் றனைத்திநம்
பணிவாம். 2

கருக்கெடுக் கின்ற வலம்புரி யிபத்தைக் களங்கமி லாறுமா முகனைப்
பருக்கிளர் வடிவாய்ப் பகருதற் குரிய பாரிஜா தவநவீச் சுரனை
யருக்கிளை ரமிர்த வல்லியம் பிகையை யருளறம் மோட்சமீ தருளுந்
திருக்களர் வீர சேகர ஞாந தேசிகன் றனைத்திநம் பணிவாம். 3

கற்றவர் பரவப் பொழிதரு கருணைக் கயமுகக் கடவுளை யசுரப்,
புற்றினைத் தகர்த்த குமரனைப் பகைவர் புரங்கொன்மா ணிக்கத்யா
கனையெம், பற்றறுத் தருளும் வடிவுடை யம்மை பதத்தினைத் தவத்
தவர் பரவு, மொற்றியூர் வாழும் பட்டணத் திறையை யுவப்புட
னிறைஞ்சிவாழ்த் திடுவோம். 4

சொல்லமு தருளு ஞானமுக் குறுணித் தோன்றலை யான்றவர்
வழுத்து, மெல்லையில் கருணைக் குகன்றனைச் சகமீ யெழிற்சிவ
காமியம் மையினை, நல்லவர் புகழு நடநா யகனை நான்மறைப்
பொருளெலாம் விரித்துத், தில்லையி லமர்பொன் னம்பல ஞான
தேசிகன் றனைத்திநம் பணிவாம். 5

நாடரும் பொருளை நமக்கருள் சித்தி நாயக னளிநகன் மலரைத்,
தாடரும் பரற்கும் பரங்கிரி யிறையைத் தாணுவாஞ் சுந்தரேச்
சுரனை, நீடிய வினைக ளியாவையும் பொடிசெய் நீள்கயற் கண்ணி
யம் மையினைத், தேடமர் கூடற் குட்டைய ஞான தேசிகன் றனைத்தி
நம் பணிவாம். 6

அருத்தநன் கடைய வளிக்குநங் கருணை யாழத்துப் பிள்ளை
யைச் சிகரிக், கொருத்தனென் றுணர்த்துங் குமரசற் குருவை
யொருவிலா விருத்தநா யகனைத், திருத்தநன் ஞானங் கொடுக்குநங்
குருவாச் செப்பிடும் விருத்தநா யகியை, விருத்தநல் லசலக் குமாரதே
வன்றன் விரைமல ரடியிணை தொழுவாம். 7

இந்துசேர் சடிலக் கயமுகன் றன்னை யிமையவர்க் கிறைவனுங்
குகனைச், சுந்தரேச் சுரனை யுலகினை யீன்ற தோகைமீ னாட்சியை
முகில்சூழ், கொந்தலர் பொழிலார் ஞிமிறின வொலிகள் குமுகுமூ
கெனுமரி மளம்வாழ், சுந்தர ஞான தேசிகன் பதத்தைத் தொழுபவர்
கழல்பணிந் திடுவாம். 8

மலர்மகண் மருக னென்னுமாற் றுரைத்த மாமுகன் றிருவடி மலரை
இலைநெடு வேலன் பாததா மரையை யினியத்யா கேச்சுரனிணையைக்
கலையுறுங் கமல நாயகி கழலைக் கருதுமா ரூரினி லிலகுந்
திலகமாந் தெட்சி ணஸ்யஞா நேச தேசிகன் றனைத்திநம் பணிவாம்.

உருப்பெருந் துறையென் றும்பரும் போற்று முமைமுதற்
சுதன்றிருப் பதத்தைத், திருப்பொருந் தரன்றன் குருபரன் பதத்
தைத் திவ்யயோ காம்பிகை பதத்தைக், கருப்பொருந் தலற மணி
மொழி பணியுங் கருதரு மாந்மநா யகனைத், திருப்பெருந் துறையி
லமர்மகா தேவ தேசிகன் றனைத்திநம் பணிவாம். 10

வானவர் புகழு மறங்களை யுகக்கும் வள்ளன்மா முகன்றனைக்
குகனைக், கோனரர் போற்றுஞ் சோமநா தனையெங் குமுதவா னந்த
வல் லியினைத், தீநரர் பவத்தி லழுந்திடா வண்ணந் திருவருண் ஞாந
நன் கருளும், வாநர மதுரை நாரண குருவை மநகினைந் திறைஞ்சி
வாழ்த் திடுவாம். 11

ஆக்கையி லபிமா னந்தனை யகற்று மைங்கர விறைவனற் பதத்தை,
வாக்கைநன் கருளு மறுமுக விறையை வள்ளல்வீ ரேசனற் பதத்தை,
யூக்கமுண் மநத்தோர் மோக்கநன் கருளு முமையமை பாததா
மரையைச், சாக்கைவீ ரப்ப ஞாநதே சிகனற் சரண்டனைத் திநம்
பணிந் திடுவாம். 12

மாவுடை யுருவு நரருடை யுருவு மன்னிடு மிபமுக விறையைத்
தேவுடைத் தேவ ரரதந மாகச் செப்பிடு மறுமுக விறையை
யாவுடை வயிரத் தூணரை யெந்த மழகிய நாயகி பதத்தைக்
காவுடை மழுவா டியிலமர் சுயம்ப்ர காசதே சிகனைவாழ்த் துதுமே.

கருவளர் துயர மொழித்தருள் புரியுங் கயமுகன் றனைப்பிர
ணவர்க்குப், பெரும்பொரு ளுரைத்த வறுமுகன் றன்னைப் பிருகதீ
சுரனைநந் திருவாம், பிருகந்நா யகியைப் புலவரும் பிறரும் பேணிடுந்
தஞ்சைமா நகர்வாழ், திருவரு ளுருவாம் பாலைய ஞான தேசிகன்
றனைப்பணிந் திடுவாம். 14

மதிநதி பொதியு மவிர்சடைப் பரமன் மகிழ்ந்தருண் மாமுகன்
றன்னை, யிதுவெனத் தனைக்காட் டிடுங்குகன் றனைப்பட் டீசுர
நாதனைத் தெருளார், பதியரு டிறம்வாய்ந் துலகினைக் காக்கும் பல்
வளை நாயகி யமையைத், திதிபட்டீச் சுரம்வாழ் சிவப்பிர காச
தேசிகன் றனைப்பணிந் திடுவாம். 15

தேட்டமாய் வேண்டும் வரங்களை யீயுஞ் சிறந்தமா முகன்பத
மலரை, ஈட்டரும் ஞாந மருளும்வே லவனை யிந்துவாழ் சோமசுந்
தரனை, வீட்டினை யருண்மீ நாட்சியம் மையினை விழுமிய நூற்பொரு
டெரிந்து, கோட்டையூர் வாழ்யோ காநந்தேந் திரநற் குருபதந்
தனைத்தினம் பணிவாம். 16

மாவின னரனல் வடிவினை யுடைய மங்கள விநாயக னடியைப், பூவில்வாழ் தேவி மருகனுங் குகனைப் பூவண்ண நாதனைப் புரைதீர், தேவரு மூவர் முடிகளு மழுந்துஞ் செண்பக வல்லிசே வடியைக், கோவினற் பட்டி யமர்முத்தா நந்த குருபதந் தனைத்தலைக் கொளுவாம். 17

கருணையீ தென்னச் சொரிதரு மதஞ்சேர் கயமுகன் றனைக் கனை யசுரப், பருவர லுறவேற் படைவிடு குகனைப் பாநுபு ரீசரை யுலகை, யருண்மர கதவல் லியின்மல ரடியை யறம்வளர் வியாசர்பாடியில்வாழ், தெருளுறுங் கருணைச் சிவப்பிர காச தேசிகன் றனைத் திநம் பணிவாம். 18

அல்லலை யகற்றுந் திறத்தினைத் தொழுவார்க் கருள்செயு மிப முகத் திறையைத், துல்லியர் துதிக்கு மறுமுகத் தவனைச் சோமசுந் தரேசனை யிடஞ்சேர், நல்லசௌந் தரிய நாயகி பதத்தை நறைமலர் சொரிபொழில் சூழுங், கல்லல்வெள் ளையப்ப ஞானதே சிகனைக் கவின்பெற நினைந்துவாழ்த் துதுமே. 19

எண்டரும் பெரியோர் தொழுதெழ வருளு மிபமுகத் திறைவனை விடத்தை, யுண்டவர்க் கருள்வே லனையரு ணிலத்தை யுண்டவர் சுந்தரே சனைமண், விண்டவர் புகழ்மீ நாட்சியை மேகம் விரைந்திவர் கண்டனூர் வாழும், திண்டரு மநமார் நாகப்ப ஞான தேசிகன் றனைப்பணிந் திடுவாம். 20

விண்டவர் பரவும் பேரருட் கடலாம் விநாயகன் றனைக்கரங் கதிர்வேல், கொண்டருண் முருகன் றனைப்புர மெரித்த கும்பவீசுரனைநேர் பாகங், கொண்டமங் களநா யகியினைக் கும்ப கோணம்வாழ்ம்பரும் பரவுந், திண்டரு ஞான நிட்டைசேர் மௌந தேசிகன் றனைப்பணிந் திடுவாம். 21

வினைகளை யொழிக்குங் கயமுக விறையை வேலவன் றிருவடி மலரைத், தனைநனி யருளுஞ் சொக்கலிங் கேசன் றன்னைமீ நாட்சியம் மையினை, மனைதனி லாசை பொருந்திடா தவர்க்கு மாசறு முத்தியை யருளப், பனைநக ரிராம கிரிநற்றே சிகனற் பாததாமரையினைத் தொழுவாம். 22

---

# ஈஶாவாஸ்யோபநிஷத்

## முகவுரை.

---

வேதம் ரிக் யஜுர் சாமம் அதர்வணம் என நான்கு பாகுபாடுடையதாம்; அவற்றுள், இரண்டாவது யஜுர் வேதமாம். வேத வியாச மஹரிஷியினிடத்தினின்றும் வைசம்பாயனரால் அத்யயநம் செய்யப்பட்டு சரக அத்வர்யு முதலிய தம் சிஷ்யர்களுக்கு அத்யயநம் செய்விக்கப்பட்ட சம்ஹிதை கிருஷ்ண யஜு: சம்ஹிதை என்று சொல்லப்படுகின்றது. வாஜிரூபந் தரித்த சூரியனிடத்தினின்றும் யாஞ்ஞவல்கியரால் அத்யயநம் செய்யப்பட்டு கண்வர் மத்யந்திநர் முதலியவர்களுக்கு அத்யயநம் செய்விக்கப்பட்ட சம்ஹிதை சுக்ல யஜு சம்ஹிதை என்று சொல்லப்படுகின்றது. சுக்ல யஜுர் வேதத்திற்குப் பதினைந்து சாகை உளது என்றும், சிலர் பதினேழு சாகை உளது என்றும் கூறுவர். சுக்ல யஜு சம்ஹிதை இரு காண்டமாக உளது. "ரிக்குக்களால் துதிக்கின்றனர்; யஜுக்களால் யஜிக்கின்றனர்" என்று கூறப்படுதலின். யஜுந ரூப இந்தச் சம்ஹிதையில் முதல் அத்தியாயத்தில் முதல் மந்திரம் ஆரம்பித்து முப்பத்தொன்பதாம் அத்தியாயம் முடியும் வரை தர்ச பூர்ண மாசம் முதல் அஶ்வமேதம் வரைக் கர்ம காண்டம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது; முடிவான நாற்பதாவது அத்தியாயத்தில் பதினெட்டு மந்திரங்களால் ஞாந காண்டம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. அது ஞாந காண்டப் பிரதிபாதகத்தால் பிரஹ்ம வித்யாபரர்களுக்குக் காரணத்தோடு கூடச் சம்சாரத்தினை அத்தியந்தம் நாசம் செய்வதா யிருத்தலின் பிரஹ்ம வித்யா உபநிஷத் எனவும் கூறப்படுகின்றது. 'உபநிஷத்' என்பது "ஷத்ல்ரு விசரணே" என்னும் வியாகரண சூத்ரத்தில் அந்தர்பாவித "ண்ய" அர்த்த விசரணார்த்த தாதுவிற்கு க்விப் ரூபம். உபநிதராம் சாதயதி—சம்சார காரண ரூபமான அவித்தையை நாசஞ் செய்கின்றதாதலின் உபநிஷத் பிரஹ்ம வித்தையாம். அதன் அர்த்தத்தினைக் கூறும் கிரந்தமும் உபசாரமாக உபநிஷத் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறுய சம்ஹிதா உபநிஷத்தில் "ஈஶாவாஸ்யம்" என முதன் மந்திரத்தினை உபஜீவித்திருப்பது "ஈஶாவாஸ்யோபநிஷத்"

என்று கூறப்படுகின்றது. "ஆத்தி சூடி" என்றும், "கொன்றை வேந்தன்" என்றும், "வெற்றி வேற்கை" என்றும் செய்யுளின் முதல் பதத்தினை ஆதியாகக் கொண்டு பெயர் வருவனபோல என அறிக.

இவ்வாறுய உபநிஷத்தில் உள்ள மந்திரங்கள் கர்மங்களில் உபயோகப்படுவன என்றும் ஞாந கர்ம சமுச்சயம் என்றும் அநேகர்கட்குச் சம்சயம் உண்டாகின்றமையின் அச் சம்சயத்தினை நிவர்த்திப்பான் சர்வ லோக பூஜ்ய சர்வேசுவராவதாரமாகிய பகவான் ஸ்ரீசங்கர பூஜ்ய பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளால் அறிதற்கரிய அருண்மொழி யமைந்த பாஷ்யம் ஆரிய பாஷையில் வரையப்பட்டிருக்கின்றது. அப்பாஷ்யத்தின்மீது ஸ்ரீசுத்தாநந்த ஸ்வாமிகளின் சிஷ்யர் ஆநந்த ஞாநர் என்பவரால் ஒரு டீகை எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீசங்கராநந்த ஸ்வாமிகளால் இப் பதினெட்டு மந்திரங்களின் மீது "தீபிகை" என்று ஒரு வியாக்கியாநம் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த மந்திரங்களின்மீது உவடபட்டாசாரியர் "பாஷ்யம்" என்று ஒன்றும், ராமச் சந்திர பண்டிதர் "ரஹஸ்ய விவிருதி" என்று ஒன்றும், ஆநந்தபட்ட உபாத்தியாயர் "பாஷ்யம்" என்று ஒன்றும், அநந்தாசாரியர் "பாஷ்யம்" என்று ஒன்றும், பிரஹ்மாநந்த சரஸ்வதி ஸ்வாமிகள் "ரஹஸ்யம்" என்று ஒன்று (சுலோக ரூபமாகவு)ம் எழுதி யிருக்கின்றார்கள். இவ்வாறு இன்னும்அநேகர் அநேக வியாக்கியாநங்கள் இம்மந்திரங்களின்மீது எழுதியிருக்கின்றார்கள்.

வேதம் முழுமைக்கும் சாயண மாதவாசாரியராலும், மஹீதராலும் இரண்டு பாஷ்யங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உவடாரியர் ஆநந்தபட்ட உபாத்தியாயர் அநந்தாசார்யர் மூவரும் சுக்லயஜுர் சம்ஹிதை முழுமைக்கும் பாஷ்யம் செய்திருக்கின்றனர் என்று அவர்கள் வாக்கியங்களாலே அறியக்கிடக்கின்றது.

இந்தச் சங்கர பாஷ்யத்திற்கு இணை வேறு இன்றென்றே கூறலாம். இவ்வாறுய பெருமைவாய்ந்த ஈசாவாஸ்யோபநிஷத் சங்கர பாஷ்யத்துடன் தமிழில் இருக்கின் அது யாவருக்கும் பயன்படும் எனக் கருதி அதனை மொழி பெயர்த்தனம்.

இதற்கு முன் இது பலரால் பல வியாக்கியாநங்களோடு இச்சையின்படி மொழி பெயர்க்கப்பட்டு வழங்கி வருதல் கண்டு தனிப் பாஷ்யத்தோடு அலங்கரித்து வழங்குதலே தகுதி யுடைத் தெனக் கருதி இம் முயற்சியில் துணிந்தாம்.

காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,

திருப் பூவணம்.

சிவமயம்.

# ஈஶாவாஸ்யோபநிஷத்தும்

## சாங்கர பாஷ்யமும்.

"ஈசாவாஸ்யம்" என்பன வாதி மந்திரங்கள் கர்மங்களின் மாட்டு விநியோகிக்கப்பட்டன வல; அவற்றிற்குக் கர்ம சேஷ மின்றிய ஆத்மாவின் உண்மைத் தன்மையினைப் பிரகாசிக்குந் தன்மை உளவாகலின். ஆத்மாவின் உண்மைத் தன்மையும், சுத்தத் தன்மை பாப சம்பந்த மில்லாத் தன்மை ஏகத் தன்மை நித்தியத் தன்மை அசரீரத் தன்மை சர்வகதத் தன்மை முதலியன மேற் புகலப்படும். அவையும் கருமத்தோடு விரோதப்படுதலின் இவற்றிற்குக் கர்மங்களின் மாட்டு விநியோக மின்மை பொருத்தமேயாம். இவ்வித லக்ஷண முடைய ஆத்மாவின் உண்மைத் தன்மை, உத்பாத்தியம் விகார்யம் ஆப்யம் சம்ஸ்கார்யம் அல்லது கர்த்தா போக்தா ரூப மன்று; எதனுற் கருமாங்கத் தன்மையாகும்? எல்லா வுபநிஷத்துக்களும் ஆத்மாவின் உண்மைத் தன்மை நிரூபணத்தானே முடிவு பெறுதலின். கீதைகளும் மோக்ஷ தர்மங்களும் இதன் சார்பாக விருத்தலின். ஆதலால், ஆத்மாவிற்கு அநேகத் தன்மை கர்த்திருத் தன்மை போக்த்ருத் தன்மை முதலியவற்றையும், அசுத்தத் தன்மை பாப சம்பந்த முடைத்தாந் தன்மை முதலியவற்றையும் கொண்டு லோக புத்தி சித்தமான கர்மங்கள் விதிக்கப்படுகின்றன. எவன் திருஷ்டமாகிய பிரஹ்மவர்சசாதி கர்ம பலேச்சை யுடையவனும், அதிருஷ்டமாகிய ஸ்வர்க்காதி கர்ம பலேச்சை யுடையவனும், "நான் த்விஜன் முதலியோன், ஒற்றைக்கண் கூன் முதலிய அநதிகாரத்திற்கு நியாமகமாகிய தர்ம முடையோ னல்லன்" எனத் தன்னை உணருகின்றனனே, அவன் கருமங்களின்மாட்டு அதிகாரியாகின்றனன் என அதிகார முணர்ந்தோர் கூறுகின்றனர். ஆகலின், இம் மந்திரங்கள் ஆத்மாவின் உண்மைத்

தன்மையைப் பிரகாசித்தலின் ஆத்ம விஷயமா யுள்ள ஸ்வாபாவிகமான அஞ்ஞானத்தினை நிவர்த்திப்பனவாய், சோகம் மோகம் முதலிய சம்சார தர்மங்களை நாசஞ் செய்யுஞ் சாதநமான ஆத்மாவின் ஏகத்தன்மை முதலிய ஞானத்தினை உண்டாக்குகின்றன. ஆதலின், இவ்வாறு கூறிய அதிகாரி அபிதேயம் சம்பந்தம் பிரயோஜநங்களை யுடைய மந்திரங்களைச் சுருக்கமாக வியாக்கியாநஞ் செய்வாம்.

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ॐ । शान्तिः शान्तिः शान्तिः ।

**हरिः ॐ । ईशा वास्यमिदꣳ सर्वं यत्किंच जगत्यां जगत् ।**
**तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्य स्विद्धनम् ॥१॥**

பதப் பொருள்.—**जगत्यां** *பிருதிவியின்கண்,* **यत् किं च** *எவ்,* **इदं** *இவ்,* **सर्वं** *எல்லா,* **जगत्** *ஜகத்தும்,* **ईशा** *பரமேஶ்வரனால்,* **वास्यं** *மறைக்கப்பட்டன,* **तेन** *அந்த,* **त्यक्तेन** *தியாகத்தினால்,* **भुञ्जीथाः** *(ஆத்மாவை) காப்பாற்றுக,* **कस्य स्वित्** *ஒருவருடைய,* **धनम्** *தநத்தினையும்,* **मा गृधः** *விரும்பற்க.*

### சாங்கர பாஷ்யம்.

*"ஈஷ்ட" இதி ஈட். அதனால் ஈசன் பரமாத்மாவாய பரமேசுவரன் எல்லாவற்றையும் ஈசிப்பவன். அவனே எல்லாச் சீவர்கட்கும் ஆத்மாவாயிருந்து பிரத்தியகாத்ம ரூபத்தால், அத் தனது ரூபமாகவிருந்து-வாஸ்யம்-மறைப்பவனவன். எது? இதம் சர்வம் யத் கிஞ்ச-யத் கிஞ்சித்-ஜகத்யாம்-பிருதிவியின்கண், ஜகத்-அவ்வெல்லாம், தனது ஆத்ம ஈசையால்-பிரத்தியகாத்ம ரூபத்தால் "நானே இவ்வெல்லாம்" எனப் பரமார்த்த சத்திய ரூபத்தால், பொய்யாகிய இதம் சர்வம்-சராசரம், ஆச்சாதநீயம்-தனது பரமாத் மாவால் (மறைக்கப்பட்டன). எங்ஙனம்? சந்தநக் கட்டை அகிற் கட்டை முதலியவற்றிற்கு ஜல முதலியவற்றின் சம்பந்தத்தாற் பிறந்த அழுகல் முதலியவற்று லுண்டாய ஔபாதிகமான துர்க்கந்தம் அதன் ஸ்வரூபத்தை அறைத்தலினால் தனது பாரமார்த்திக கந்தத்தினால்*

*மறைக்கப்படுகின்றதோ, அங்ஙனமே தன தாத்மாவின்கண் அத்தியஸ்தமா யுள்ள ஸ்வாபாவிகமான கருத்திருத்வ போக்திருத்வாதி லக்ஷண, ஜகத்—த்வைத ரூபத்தினை, ஜகத்யாம்—பிருதிவியின்கண், "ஜகத்யாம்" என்பது உபலக்ஷணார்த்தமாகலின் எல்லா நாம ரூப கர்மம் என்னும் பெயரினையுடைய விகாரக்கூட்டம் பாமார்த்த சத்திய ஆத்ம பாவனையினால் விடப்பட்டதாகின்றது. இவ்வாறு ஈசுவராத்ம பாவனையோடு கூடியவனுக்குப் புத்திரன் முதலிய ஏஷணை மூன்றன் சந்நியாசத்தின்கண்ணே அதிகாரமாம்; கர்மங்களின் மாட்டு அன்றாம். தேந த்யக்தேந—தியாகத்தால் என்பது பொருள், ஆத்ம சம்பந்தித் தன்மை யின்மையால் விடப்பட்ட, அல்லது, மரிக்கப்பட்ட, புத்திரன் அல்லது வேலைக்காரன் ஆத்மாவை (தன்னை)க் காப்பாற்றுவ தில்லை, அதனால் தியாகத்தினா லென்பதே வேதத்தின் பொருளாம்.—புஞ்ஜீதா:—பாலிக்குக, இவ்வாறு ஏடணையற்ற நீ, மா கிருத:—தந விஷயமான இச்சையினைச் செய்யற்க, கஸ்ய ஸ்வித் தநம்-அந்நியருடைய, அல்லது தன்னுடைய தநத்தினை இச்சிக்கற்க என்பது பொருளாம். "ஸ்வித்" என்பது அர்த்தமின்றிய நிபாதம (அசை நிலைய)ாம். அல்லது—மா கிருத:—இச்சிக்கற்க. எதனால்? கஸ்ய ஸ்வித் தநம்—யாருடைய தநம் என்பது ஆக்ஷேபார்த்தம், ஒருவருடைய தநமு மன்று, எதனை இச்சிக்கின்றாய். "ஆத்மாவே இவ்வெல்லாம்" என்னும் ஈச்வர பாவனையினால் எல்லாம் விடப்பட்டன வாம். அதனால், ஆத்மாவினதே இவ்வெல்லாம், ஆத்மாவே இவ் வெல்லாம். ஆகலின் மித்தியா விஷயமான இச்சையினைச் செய்யற்க என்பது பொருள்.* (1)

இவ்வாறு ஆத்ம ஞானியானவன் புத்திராதி மூவேடணையின் சந்நியாசத்தினால் ஆத்ம ஞானத்தில் நிலைத்திருத்தல் வாயிலாய் ஆத்மா ரக்ஷிக்கத்தக்கது என்பது வேதத்தின் பொருளாம். இனி, அநாத்மாவினை உணர்வதால் ஆத்மாவினைக் கிரகிக்கும் சமர்த் தின்றிய அந்நியருக்கு இந்த மந்திரம் உபதேசிக்கின்றது.

**कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतꣳ समाः ।**

**एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥२॥**

ப-ள்—**इह** *இவ்வுலகத்தில்,* **कर्माणि** *கருமங்களை,* **कुर्वन्** **एव** *செய்துகொண்டே,* **सतं** *நூறு,* **समाः** *வருஷங்கள்,*

**जिजीविषेत्** பிழைத்தற் கிச்சை செய்க, **एवं** இவ்வாறு (பிழைக்க விச்சிக்கும்), **नरे** நரனாகிய, **त्वयि** உன்னிடத்து, **इतः** இதனினின்றும், **अन्यथा** வேறு (மார்க்கம்), **न अस्ति** இருப்பது இல்லை, **कर्म** கருமங்கள், **न लिप्यते** பூசப்படுவன அல்ல.

**சா-ம்.** குர்வந் ஏவ இஹ-செய்து கொண்டே, கர்மாணி - அக்நிஹோத்தரம் முதலியவற்றை, ஜிஜீவிஷேத்-பிழைக்க விச்சை செய்க,சதம்-நூறு எண்ணிக்கை யுடைய, சமா:-வருஷங்கள், அவ்வளவே புருஷனுடைய முடிவான ஆயுள் நிரூபிக்கப்பட்டதாம். ஆகவே, பிராப்தத்தின் அநுவாதத்தினால் எவனுக்கு நூறு வருஷங்கள் பிழைத்திருக்க விச்சை யிருக்கின்றதோ அவன் கருமங்கள் செய்துகொண்டே இருக்க என்று விதிக்கப்படுகின்றது. ஏவம்—இவ்வாற்றால், த்வயி—(ஜீவிக்க இச்சிக்கும்) உன்னிடத்தில், நரே—நரமாத்திர அபிமாநமுடைய (உன்னிடத்தில்), இத:—இவ் வக்நிஹோத்திராதி கர்மங்கள் செய்வதில் நின்றும், அந்யதா-வேறு பிரகாரம், ந அஸ்தி-இல்லை, எந்த வாற்றால் அசுபகர்மம் பூசப்படுவ தில்லை, கர்மத்தினாற் பூசப்படுவ தில்லை யென்பது பொருளாம். அதனால் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட அக்நிஹோத்திராதி கர்மங்களைச் செய்துகொண்டே பிழைக்க விச்சிக்குக. எவ்வாறு இங்ஙனம் அறியப்படுகின்றது? முதன் மந்திரத்தால் சந்யாசிக்கு ஞாந நிஷ்டை கூறப்பட்டது, இரண்டாவதால் அதன்கண் சமர்த் தின்றியவனுக்குக் கர்ம நிஷ்டை கூறப்படுகின்றது; ஞாந கர்மங்களின் விரோதம் மலை போன்று அசை வற்றதேயாம். புகன்றதனை மரிக்க வில்லையா என்? ஈண்டும் "எவன் ஜீவிக்க இச்சிக்கின்றனன் அவன் கர்மஞ் செய்க" "இவ்வெல்லாம் பரமேஶ்வரனால் மறைக்கப்பட்டிருக்கின்றன. அதனால், தியாகத்தினால் பாலிக்க, எவருடைய தநத்தினையும் இச்சை செய்யற்க" எனக் கூறப்பட்டிருக்கின்றது. "பிழைத்தலிறத்தலை விரும்பற்க. ஆரண்யம் செல்க" எனப் பதம் (உண்மையின்.) "அதனினின்றும் மீண்டு திரும்பற்க" எனச் சந்நியாசத்தினை விதித்தலின். இரண்டற்கும் பல பேதமும் மேற் புகலுதும். இவ்விரண்டு மார்க்கங்களே உண்டாகியிருக்கின்றன. முன்னது கிரியா மார்க்கமாம். பின்னதாகிய நிவிருத்தி மார்க்கத்தினால் ஏஷணாத் திரயத்தின் தியாகமாகிய சந்நியாசமாம். அவற்றுள் சந்நியாச பதமே ஏற்ற முடைத்து, "நியாசமே ஏற்ற முடையது" என்பது தைத்திரீயகத்தில். "இவ்விரண்டு மார்க்கங்கள் யாண்டு வேதங்கள் நிலைத்திருக்கின்றன. பிரவிருத்தி லக்ஷணம் தர்மம், நிவிருத்தி கூறப்படுகின்றன" என்பதாதி வேதாசாரியராகிய பகவான் வியாசரால்

புத்திரனுக்கு விசாரித்து நிச்சயித்துக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டினது பகுப்புக் காண்பிப்பாம். (2)

இப்பொழுது அவித்துவானது நிந்தையின் பொருட்டு இம் மந்திரம் ஆரம்பிக்கப்படுகின்றது.

**असुर्या नाम ते लोका अन्धेन तमसा ऽऽ वृताः ।**
**ता ँ स्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥३॥**

ப-ள்—**ये के च** எவர்கள், **आत्महनः जनाः** ஆத்மாவைக் கோறல் செய்கின்றனரோ, **ते** அவர்கள், **अन्धेन** அஞ்ஞாந, **तमसा** இருளால், **आवृताः** மறைக்கப்பட்ட, **असुर्याः नाम** அசுர சம்பந்த, **ते** அந்த, **लोकाः** ஜந்மங்களாய, **तान्** அவற்றை, **प्रेत्य** மரித்து, **अभिगच्छन्ति** அடைகின்றனர்.

சா-ம். அசுர்யா:-பரமாத்மபாவமான அத்வயத்தினை யபேக்ஷித்துத் தேவாதிகளும் அசுரர்களே, அவர்களினது தன் சொரூபங்களாய லோகங்கள் அசுர்யங்கள். நாம சப்தம் அர்த்த மின்றிய நிபந்தம (அசைநிலைய)ாம். தே லோகா:-கர்ம பலங்களை லோகநஞ் செய்கின்றன—பார்க்கின்றன—புஜிக்கின்றன என ஜந்மங்களாம அந்தேந—அதர்சந ரூபமாகிய அஞ்ஞாநத்தினுல், தமசா— (இருளால்) ஆவிருதா:-மறைக்கப்பட்டன, தாந்—(அந்த) ஸ்தாவராந்தங்களை, பிரேத்ய—இத் தேகத்தினை விட்டு, அபிகச்சந்தி—எங்ஙனம் கர்மம் எங்ஙனம் கேட்கப்பட்டன (அங்ஙனம் அடைகின்றனர்), யே கே ச ஆத்ம ஹநா:-ஆத்மாவினைக் கோறல் செய்கிறவர் ஆத்மஹநர், கே தே ஜநா:-எவர்கள் அவிவேகிகளோ அவர்கள், எங்ஙனம் அவர்கள் ஆத்மாவினை நித்தியம் கோறல் செய்கின்றனர்? அவித்தியா தோஷத்தினுல் உளதாய ஆத்மாவினைத் திரஸ்காரஞ் செய்தலின். உளதாய ஆத்மாவினது அஜராமரணத் தன்மை முதலிய சம்வேதந லக்ஷணமாகிய எக்காரிய பல முண்டோ, அது ஹதமானது போன்று திரோ பூதமா யிருத்தலின் பிராகிருதமாய அவிவேகி ஜநங்கள் "ஆத்மஹநர்" என்று கூறப்படுகின்றனர். அதனுல், அவர்கள் ஆத்மாவினைக் கொன்ற தோஷத்தினுல் சம்சாரி ஆகின்றனர். (3)

எந்த ஆத்மாவினைக் கோறல் செய்வதனுல் அவித்துவான்கள் சம்சாரி ஆகின்றனர் அதன் விபரீதத்தால் வித்துவான்கள் விடுபடுகின்றனர். அவர்கள் ஆத்மாவினைக் கோறல்

செய்பவ ரல்லர். அவ்வாத்ம தத்துவம் எவ்வாறுயதாம் எனின் கூறுகின்றது.

अनेजदेकं मनसो जवीयो नैनद्देवा आप्नुवन्पूर्वमर्षत्।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥४॥

ப-ள்—**अनेजत्** (அது) *அசைவற்றது*, **एकं** *ஒன்று*, **मनसः** *மனத்தினும்*, **जवीयः** *மிக விரைந்து செல்லுந் தர முடையது*, **एनत्** *இதனை*, **देवाः** *இந்திரியங்கள்*, **न आप्नुवन्** *பொருந்தா*, **पूर्वं** (*எதனால் மனத்தினும் முன்பு*), **अर्षत्** *செல்கின்றதோ*, **तत्** (*அதனால்*) *அது*, **तिष्ठत्** *அசைவற்றிருந்து*, **धावतः** *விரைந்தோடுகின்ற*, **अन्यान्** *அந்நியவற்றை*, **अत्येति** *கடந்து செல்கின்றது*, **तस्मिन्** *அதன்கண்*, **मातरिश्वा** *வாயு*, **अपः** *கருமங்களை*, **दधाति** *பகுக்கின்றது*.

*அநேஜத்—ந ஏஜத், "எஜ்ரு கம்பநத்தில்" கம்பநம்—சலநம்—தன் அவஸ்தையினின்றும் நழுவுதல், அஃதின்றிய தன்மை, சர்வதா ஏக ரூப மென்பது பொருளாம். அஃதெல்லாப் பூதங்களிலும் ஒன்றும். மநச:—சங்கற்பாதி லக்ஷணத்தினின்றும், ஜவீய:—வேக முடைத்து, "துருவம் நிச்சலம் இது மநத்தினும் வேக முடைத்" தென்று இவ்வாறு விருத்தமாக எங்ஙனம் கூறப்படுகின்றது? இது குற்ற மன்று, உபாதியின்மை, உபாதி உடைத்தாந் தன்மையாற் பொருந்துதலின். ஆண்டு நிருபாதிகமாகிய தனது ரூபத்தினால் "அநேஜதேகம்" என்று கூறப்படுகின்றது. மநஸ:—சங்கற்ப விகற்ப லக்ஷண அந்தக்கரண உபாதியின் அநுவர்த்தநத்தால் ஈண்டு தேகத்தினுள்ள மநதிற்குப் பிரஹ்ம லோகாதி தூரஞ் செல்லல் சங்கற்பத்தினாற் க்ஷண மாத்திரத்தினால் உண்டாகின்றது. அதனால் மநத்தினும் விரைந்து செல்லுந் தன்மை லோகத்தில் பிரசித்தமாம். அந்த மநதில் பிரஹ்ம லோகாதிகளைச் சீக்கிரஞ் செல்லுங்கால் முதலில் அடைந்தது போன்று ஆத்ம சைதந்ய விளக்கமானது கவருகின்றது; அதனால் மநத்தினும் விரைந்து செல்லுகின்றது என்று கூறப்பட்டது. ந ஏநத் தேவா:—விளக்குதலின் தேவர்கள்—சக்ஷு முதலிய இந்திரியங்கள், ஏநத்—(இவைகள்) பிருகிருதமாய ஆத்ம தத்துவத்தினை, ந ஆப்நுவந்—அடைய வில்லை; அதனினும் மநம் வேக முடைத்து மந வியாபார வியவஹிதமாகலின் ஆத்மாவின் அவபாச*

மாத்திரமும் தேவர்கட்கு விஷயமாவதே யின்றும். எவ் வேகத்தி ஞல் மநத்தினும், பூர்வம்—முன்னரே, அர்ஷத் — சென்றிருக்கின் றது; ஆகாயம் போன்று வியாபியாகலின். சர்வ சம்சார தர்ம மின் றிச் சர்வ வியாபியாய அந்த ஆத்ம தத்துவம் தனது நிருபாதிக ஸ்வ ரூபத்திஞல் அவிக்கிரியமாக விருந்து, உபாதியிஞற் செய்யப்பட்ட எல்லாச் சம்சார விக்கிரியைகளேயும் அநுபவிக்கின்றது போன்றும், மூடர்களாய அவிவேகிகட்கு அநேகம் போன்றும் ஒவ்வொரு தேகத் திலும் விளங்குகின்றது என்று கூறப்படுகின்றது. தத் தாவத:— விரைவிற் சென்று, அந்யாந்—ஆத்ம விலக்ஷணங்களாய மநம் வாக்கு இந்திரிய முதலியவற்றை, அத்யேதி—அதிக்கிரமித்துச் செல்லுகின் றது போன்று, போலும் என்னும் அர்த்தம் தானே காண்பிக்கின் றது, 'திஷ்டத்' என, தான் அவிக்கிரியமாயிருந்து என்பது பொருளாம். தஸ்மிந்—நித்திய சைதந்ய ஸ்வபாவமாகிய ஆத்ம தத் துவம் உளதாங்கால், மாதரிஶ்வா:—மாதரி—ஆகாயத்தில், ஶ்வயதி— செல்லுகின்றது ஆகலின் மாதரிஶ்வா வாயுவாம். எல்லாப்பிராணி களின் கிரியாரூபமாயும் எதனை ஆசிரயித்துக் காரிய காணக் கூட் டங்கள் இருக்கின்றனவோ, எதன்கண் ஓதப் புரோதமோ, எது சூத் திரம் என்னும் பெய ருடையது, எல்லா வுலகத்தினையும் தாங்கு வது அது மாதரிஶ்வா வாம். அப:—பிராணிகளின் சேஷ்டா லக்ஷ ணமாய கருமங்களே, அக்கினி சூரியன் மேக முதலியவற்றினது ஜ்வலித்தல் தஹித்தல் பிரகாசித்தல் வருஷித்தல் முதலிய லக்ஷ ணங்களே, ததாதி—பகுக்கின்ற தென்பது பொருளாம். அல்லது, தரிக்கின்றது என வாம். "இதன் பயத்திஞல் வாயுச் செல்லுகின் றது" என்பன வாதி சுருதிகளால். காரிய காரண முதலிய கிரியை யாவும் எல்லாவற்றிற்கும் ஆஸ்பதமா யுள்ள நித்திய ஆத்ம சைதந்ய மிருக்குமிடத்தே உண்டாம் என்பது பொருளாம். (4)

மந்திரங்கட்குச் சாமிதா (சோம்பல்) இல்லையாகலின் முன், மந்திரத்திற் புகன்ற பொருளினை மீண்டும் புகல்கின்றது.

**तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके ।**

**तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥५॥**

ட-ள்—**तत्** அது, **एजति** சலிக்கின்றது, **तत्** அது, **न एजति** சலிக்கின்றதில்லை, **तत्** அது, **दूरे** தூரத்தில் (இருக்கின் றது), **तत् उ** அது, **अन्तिके** சமீபத்தில் (இருக்கின்றது), **तत्**

அது, **अस्य** இவ், **सर्वस्य** எல்லாவற்றினது, **अन्तः** உள்ளில் (இருக்கின்றது), **तत् उ** அது, **अस्य** இவ், **सर्वस्य** எல்லாவற்றினது, **बाह्यतः** வெளியில் (இருக்கின்றது).

சா-ம். தத்- ஆத்ம தத்வம், எது பிரகிருதமோ அது. ஏஜதி- சலிக்கின்றது, அஃதே, ந ஏஜதி-ஸ்வயமாகச் சலிக்கின்றதில்லை, ஸ்வயமாகச் சலிப்பற்றதே சலிப்பது போன்று என்பது பொருளாம். மற்றும், தத் தூரே-அவித்வான்கட்கு நூறு கோடி வருஷங்களாலும் அடையப்படாமையின் தூரம் போன்று (இருக்கின்றது), தத் உ அந்திகே எனப் பகுக்க. தத் உ அந்திகே-அது அத்தியந்த சமீபத்திலே (இருக்கின்றது), வித்வான்களது ஆத்மத் தன்மையாக விருத்தலின் கேவலம் தூரத்திலும் அந்தத்திலும் அன்று. தத் அந்த:—(அது) இவ்வெல்லாவற்றினது உள்ளில், "எவ்வாத்மா சர்வாந்தரம்" என்னும் சுருதியால். அஸ்ய சர்வஸ்ய - நாமரூப கிரியாத்மக ஜகத்தினது, தத் உ- (அது)வும், சர்வஸ்ய அஸ்ய பாஹ்யத:-வியாபகமாகலின் ஆகாசம் போன்று நிரதிசய சூக்ஷ்மம் ஆகலின் உள்ளாம். பிரஞ்ஞான கநமே என்றும் நிரந்தாமும் சாசநம செய்தலின். (5)

**यस्तु सर्वाणि भूतान्यात्मन्येवानुपश्यति ।**
**सर्वभूतेषु चाऽऽत्मानं ततो न विजुगुप्सते ॥६॥**

ப-ள்—**यः तु** எவன், **सर्वाणि** எல்லா, **भूतानि** பூதங்களையும், **आत्मनि एव** ஆத்மாவினிடத்தே, **अनुपश्यति** பார்க்கின்றனனோ, **सर्वभूतेषु च** எல்லாப் பூதங்களிலும், **आत्मानं** ஆத்மாவை (பார்க்கின்றனனோ), **ततः** அதனால், **न विजुगुप्सते** (அவன்) தயை செய்யான். 6

சா-ம். ய:-பரிவிராட் முமுக்ஷு, சர்வாணி பூதாநி- அவ்யக்தம் முதல் ஸ்தாவர பரியந்தமானவற்றை, ஆத்மநி வ்ஏவ அநுபஸ்யதி. ஆத்மாவிற்கு வேறுயவற்றைப் பார்ப்பதில்லை என்பது பொருள். சர்வபூதேஷு ச-அவற்றின்கண்ணே, ஆத்மாநம்-அந்தப் பூதங்களுக்கும் தன் ஆத்மாவை ஆத்மத்தன்மையால், எங்ஙனம் கார்ய காரண சங்காத இத்தேஹத்திற்கு ஆத்மாவான் நான் சர்வ பிரத்தியய சாக்ஷி ரூப சேதயிதா கேவலம் நிர்க்குணனோ, அங்ஙனமே அவ்யக்த முதல் ஸ்தாவராந்தங்கட்கு நானே ஆத்மா, ஆகலின், எல்

லாப் பூதங்களிலும் நிர்விசேஷமான ஆத்மாவை எவன் பார்க்கின்றானோ அவன், தத:-அத்தெரிசநத் தானே, ந விஜுகுப்சதே-விஜுகுப்சாம்-தயை, செய்வ தில்லை, பிராப்தத்தினது அநுவாதமே இஃதாம். ஆத்மாவினும் அந்யமான எல்லாக் கிருபையும் துஷ்டம் எனப் பார்த்து ஆத்மாவினையே அத்தியந்த விசுத்தமாக நிரந்தரம் பார்ப்பவனுக்குத் தயையின் நிமித்த வேறு பொருள் இல்லையாகலின் அடையப்பட்டதேயாம். அதனால் தயை செய்யான் எனக் (கூறப்பட்டது). (6)

இப் பொருளினையே வேறு மந்திரமும் கூறுகின்றது.

**यस्मिन्सर्वाणि भूतान्यात्मैवाभूद्विजानतः ।**
**तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥७॥**

ப-ள்—**यस्मिन्** எப்பொழுது, **सर्वाणि** எல்லா, **भूतानि** பூதங்களும், **आत्मा एव** ஆத்மாவாகவே, **अभूत्** இருக்கின்றது (என), **विजानतः** உணர்பவனுக்கு, **तत्र** அப்பொழுது, **एकत्वं** (ஆத்மாவின்) ஏகத்தன்மையினை, **अनुपश्यतः** பார்ப்பவனுக்கு, **मोहः** மோகம், **कः** ஏது, **शोकः** சோகம், **कः** ஏது. (சோக மோஹம் இன்றாம்).

*சா-ம்.* யஸ்மிந்-எக்காலத்தில், அல்லது புகன்ற ஆத்மாவினிடத்தில், அந்தப் பூதங்கள் எல்லாவற்றையுமே பரமார்த்த ஆத்ம தரிசநத்தினால், ஆத்மா ஏவ அபூத் - ஆத்மாவே சம்விருத்தம் பரமார்த்த வஸ்து, விஜாநத:—உணர்பவனுக்கு, தத்ர—அக்காலத்தில், தத்ர—அல்லது ஆத்மாவினிடத்தில், க: மோஹ: க: சோக:-சோகமும் மோஹமும் காம கர்ம பீஜத்தினை உணராதவனுக்கு உண்டாம். சுத்தமாய ஆகாயம் அன்ன ஆத்மாவின் ஏகத்தன்மையினை உணர்பவனுக்கு இன்றாம். "மோஹம் ஏது சோகம் ஏது" என்று அவித்யா காரியமான சோக மோகங்களின் ஆக்ஷேபணத்தால் அசம்பவம் காட்டப்படலின் காரணத்தோடு கூடிய சம்சாரத்திற்கு அந்தியந்த நாசமே காட்டப்பட்டதாகின்றது. (7)

எவ் வாத்மா முன் மந்திரங்களாற் கூறப்பட்டதோ, அவ் வாத்மா தன் ஸ்வரூபத்தால் எவ்விலக்ஷணம் என்பதனை இம் மந்திரம் கூறுகின்றது.

**स पर्यगाच्छुक्रमकायमव्रणमस्नाविरꣳ शुद्धमपापविद्धम् ।**
**कविर्मनीषी परिभूः स्वयंभूर्याथातथ्यतोऽर्थान्व्यदधाच्छाश्व-**
**तीभ्य समाभ्यः ॥८॥**

ப-ள்—**सः** அது, **पर्यगात्** எங்கும் செல்கின்றது, **शुक्रं** சுத்தமானது, **अकायं** காயம் அற்றது **अव्रणं** இரணம் இல்லாதது, **अस्नाविरं** நரம்பு இல்லாதது, **शुद्धं** சுத்தமானது, **अपापविद्धं** பாபசம்பந்தம் அற்றது, **कविः** கவி, **मनीषी** மநீஷீ, **परिभः** பரிபூ, **स्वयंभूः** ஸ்வயம்பூ, **याथातथ्यतः** யதார்த்தரூப கர்ம பல சாதநத்தன்மையிஞல், **अर्थान्** (செய்யத்தக்க) பதார்த்தங்களை **शश्वतीभ्यः** நித்தியமான, **समाभ्यः** (வருஷம் எனப் பெயரிய) பிரசாபதியின்பொருட்டு, **व्यदधात्** பாகுபாடு செய்தது.

சா—ம். ச பர்யகாத்-முற் புகன்ற ஆத்மா, பரி-எங்கும், அகாத்-செல்கின்றது. ஆகாசம் போன்று வியாபி என்பது பொருள், சுக்ரம்-சுத்தம், சோதியோடு கூடியது பிரகாசம் உடையது என்பது பொருள், அகாயம்-காயம் அற்றது லிங்க சரீரம் இல்லாதது என்று பொருள், அவ்ரணம்-அக்ஷதம், அஸ்நாவிரம்-ஸ்நாவா:-நரம்புகள் எதன்கண் இல்லையோ அது அஸ்நாவிரம் (நரம்புகள் இல்லாதது என்பது பொருள்), “அவ்ரணம் அஸ்நாவிரம்” என்னும் இவ்விரண்டுகளால் தூல சரீர நிஷேதமாம். சுத்தம்-நிர்மலம் அவித்யா மல ரகிதம் ஆகலின் காரண சரீர நிஷேதமாம், அபாப வித்தம்-தர்ம அதர்மாதி பாபம் அற்றது, “சுக்ரம்” என்பதாதி வசநங்களை புல்லிங்கத் தன்மையிஞல் திரித்திக் கொள்க. “ச பர்யகாத்” என உபக்கிரமித்து “கவிர் மநீஷீ” என்பன ஆதியால் புல்லிங்கத்தன்மையால் உபசம்ஹாரம் செய்யப்படுதலின். கவி:-கிராந்த தரிசி எங்கும் பார்ப்பது. “இதனினும் வேறு திருஷ்டா இல்லை” என்பன வாதி சுருதியால். மநீஷீ—மநச:-மநதிற்கு, ஈஷிதா-சர்வஞ்ஞன் ஈசுவரன் என்பது பொருள், பரிபூ:—பரி-எல்லாவற்றிற்கும் மேலாய், பூ:-இருப்பது பரிபூவின் பொருளாம், ஸ்வயம் பூ:-ஸ்வயமே உண்டாகின்றது. எவற்றிற்கு மேலாகின்றதோ எது மேலா யிருக்கின்றதோ, அவ்வெல்லாம் ஸ்வயமே உண்டாகின்றமையின் ஸ்வயம் பூ

ஆம், அந்த நித்ய முக்தஞன ஈஶ்வரன், யாதா தத்யத: -சர்வஞ்ஞன் ஆகலின், யதா ததா பாவ: - யாதாதத்யம், தஸ்மாத் - யாதாதத் யத்தால்—யதா பூத கர்ம பல சாதநத்தால், அர்த்தாந்-செய்யத் தக்க பதார்த்தங்களை, வ்யததாத் - விதித்தார், யோக்கியமாகப் பகுத் தார் என்பது பொருள். ஶாஶ்வதீப்ய: - நித்தியமாகிய, சமாப்ய:- சம்வத்சரம் எனப் பெயரிய பிரஜாபதியின் பொருட்டு என்பது பொருள். (8)

**अन्धं तमः प्रविशन्ति येऽविद्यामुपासते ।**
**ततो भूय इव ते तमो य उ विद्याया ँ रताः ॥९॥**

ப-ள்—**ये** எவர், **अविद्यां** கர்மத்தை, **उपासते** அநுஷ்டிக் கின்றரோ, **अन्धं** (அவர்) குருட்டு, **तमः** இருட்டு உல கத்தை, **प्रविशन्ति** அடைகின்றனர், **ये उ** எவர், **विद्यायां** உபா சனையில், **रताः** ஆசை உள்ளவர்கள், **ते** அவர்கள், **ततः** அதை விட, **भूय इव** விசேஷமான, **तमः** இருட்டுலகத்தை (அடை கின்றனர்).

சா-ம். ஈண்டு முதன் மந்திரத்திஞல் எல்லா ஏஷணையின் பரித் தியாகத்திஞல் ஞாந நிஷ்டை கூறப்பட்டது முதல் வேத அர்த்த மாம். ஈஶாவாஸ்யம் இதம் சர்வம் மாகிருத: கஸ்ய ஸ்வித் தநம் என. ஜீவிக்கும் இச்சையுடைய அஞ்ஞாநிகளுக்கு ஞாந நிஷ்டை சம்பவியாமையின் "குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத்" எனக் கர்ம நிஷ்டை கூறப்பட்டது இரண்டாவது வேத (மந்திர) த் தின் பொருளாம். இவ் விரண்டு நிஷ்டைகளின் விபாகம் மந்திரம் அறிவித்ததில், பிருஹதாரண்யகத்திலும் "ஸோ அகாமயத ஜாயா மே ஸ்யாத்" என்பதாதியால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. "அஞ் ஞஸ்ய காமிந: கர்மாணி", "மந ஏவ அஸ்ய ஆத்மா வாக் ஜாயா" என்பன ஆதி வசநத்தால், அஞ்ஞத்தன்மையும் காமித்தன்மையும் கர்மநிஷ்டனுக்கு நிச்சயமாக அறியப்படுகின்றது. ஆகவே, அதன் பலம் சப்தாந்ந சிருஷ்டியாம். அவற்றில் ஆத்ம பாவத்தால் ஆத்ம ஸ்வரூப ஸ்திதியாம். ஜயாயாதி ஏஷணைத் திரய சந்யாசத்திஞலும் ஆத்மவித்துகட்கு கர்மநிஷ்டையின் பிரதிகூலத்தன்மையிஞல் ஆத்ம ஸ்வரூப நிஷ்டையே "கிம் பிரஜயா கரிஷ்யாம: யேஷாம்

னோ அயம் ஆத்மா அயம் லோக" என்பதாதியால் அறிவிக்கப் பட்டது.

எவர்கள் ஞாந நிஷ்டையை உடைய சந்யாசிகளோ அவர் களின் பொருட்டு "அசுர்யா நாம தே" என்பதாதியால் அவித் வானது நிந்தையின் வாயிலாய் ஆத்மாவின் யாதாத்மியம் "ஸ பர்ய காத்" என்பவற்றை அந்தமாக உடைய மந்திரங்களால் உபதே சிக்கப்பட்டது. அவர்களே ஈண்டு அதிகாரிகள் காமிகள் அன்று என (உணர்க).

ஆகவே சுவேதாசுவதரர்களது மந்திரோபநிஷத்தில் "அத் யாசிரமிப்ய: பரம் பவித்ரம் புரோவாச சம்யக் ரிஷிசங்கஜுஷ்டம்" என்பதாதி பகுத்துக் கூறப்பட்டது.

எவர்கள் கர்மிகளாய்க் கர்ம நிஷ்டர்களாய்க் கர்மம் செய்து கொண்டே ஜீவிக்க இச்சிக்கின்றனரோ, அவர்களின்பொருட்டு "**அந்தம் தம:**" என்பதாதி இது கூறப்படுகின்றது.

மீண்டும் இவ்வாறு எங்ஙனம் அறியப்படுகின்றது எல்லோருக் கும் இன்று என (எனின்) கூறப்படுகின்றது:—அகாமிக்குச் சாத்ய சாதந பேத நிவர்த்தியால் "எதன்கண் எல்லாப் பூதங்களேயும் ஆத் மாவாகவே யிருக்கின்றன (என) அகாமியாய் அறிபவனுக்கு ஆண்டு மோகம் எது சோகம் எது ஏகத்தன்மையினே உணர்வோனுக்கு" என.

எது ஆத்ம ஏகத்வ விஞ்ஞாநம், அதை எக்கர்மத்திேைடா வது, வேறு எந்த ஞாநத்திேைடாவது அமூடன் சமுச்சயம் செய்ய இச்சியான். ஈண்டோ சமுச்சய இச்சையால் அவித்வான் முதலி யோரது நிந்தை செய்யப்படுகின்றது.

ஆண்டு எதற்கு எதனேடு நியாயத்தானும் அல்லது சாஸ்த்ரத் தானும் சமுச்சயம் சம்பவிக்கின்றதோ அது ஈண்டுக் கூறப்படு கின்றது. எது தைவ வித்தம் தேவதா விஷய ஞாநம் கர்ம சம்பந் தத் தன்மையால் உபந்யாசிக்கப்பட்டதோ (அஃதாம்). பரமாத்ம ஞாநம் அன்றும் "வித்தையினல் தேவ லோகம்" என வேறுகப் பலன் கேட்கப்படுதலின்.

அந்த ஞாந கர்மங்களுக்கு ஈண்டு ஒன்றென்றின் அநுஷ்டாந நிந்தை சமுச்சய இச்சையால் (செய்யப்படுகின்றது). "வித்தை யினல் அதனே ஏறிவிடுகின்றனர்", "வித்தையினல் தேவ லோ கம்", "ஆண்டு தக்ஷிணர் செல்வதில்லை", கர்மத்தினல் பிதிர்

லோகம்" என்பன வாதி வேறு பலன் கேட்கப்படுதலின் நிந்தையின் பரமே யன்றும். சாஸ்த்ரத்தால் விதிக்கப்பட்டது ஒன்றும் செய்யத்தகாமை ஆவது இல்லை.

ஆண்டு அந்தம் தம:-அதர்சந ரூபம் இருட்டை அடைகின்றனர். கே - யார், ஏ-எவர், அவித்தியாம் - வித்தைக்கு அந்நியமான அவித்தையை அஃதாவது கர்மம் என்பது பொருளாம்; கர்மத்திற்கு வித்தையின் விரோதித்தன்மை உளவாகலின். தாம் - அந்த, அவித்யாம் - அக்நிஹோத்ராதி லக்ஷணத்தினையே, கேவலம் உபாசிக்கின்றவர், அதன் பரமாக இருந்து அநுஷ்டிக்கின்றவர் என்பது கருத்தாம்.

தத: - அதனினின்றும், குருட்டு ரூப தமத்தினின்றும், பூய இவ - மிகுதியாகவே, தே தம: பிரவிசந்தி - அவர்கள் இருட்டை அடைகின்றனர். (எவர்) கர்மத்தினைவிட்டு, யே உ - எவர், வித்யாயாம் ஏவ-தேவதா ஞானத்தின்கண்ணே, ரதா: - ரமிக்கின்றனர். (அவர் என உணர்க). ஆண்டு வித்தை கர்மங்களினது சமுச்சய காரணமான அவாந்தர பல பேதம் கூறப்பட்டது. இங்ஙனம் கொள்ளாக்கால் சந்நிதியில் உள்ள பல முடையதற்கும் பலம் இன்றியதற்கும் அங்காங்கித் தன்மையே ஆம் என்பது பொருள். (9)

**अन्यदेवाहुर्विद्ययाऽन्यदाहुरविद्यया ।**
**इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥१०॥**

ப-ள்—**विद्यया** - வித்தையினால், **अन्यत् एव** - வேறாகவே **आहुः** - (பலம்) கூறுகின்றனர், **अविद्यया** - அவித்தையி (கர்மத்தி) னால், **अन्यत् एव** - வேறாகவே, **आहुः** - (பலம்) கூறுகின்றனர், **इति**-இவ்வாறு, **धीराणां** - புத்திமான்களது (வசநம்), **शुश्रुम** - கேட்டிருக்கின்றோம், **ये**- எந்த (ஆசார்யர்), **नः** - நமக்கு, **तत्** - அந்த (கர்ம ஞானங்களை), **विचचक्षिरे** - வியாக்யானம் செய்தனரோ (அவர்களது ஆகமம் பரம்பரையாக வந்ததாம்).

சா-ம். அந்யத்-பிருதக்காகவே வித்தையினால் செய்யப்படுகின்றது பலம் என்று, ஆஹு: - கூறுகின்றனர், "வித்தையினால் தேவலோகம் வித்தையினால் அதனை ஏறுகின்றனர்" என்னும் சுருதியினால். அந்யத் ஆஹு: அவித்யயா - கர்மத்தினால் வேறாகவே

செய்யப்படுகின்றது, " கர்மத்தினல் பிதிர் லோகம் " என்னும் சுருதியினல். இதி - இவ்வாறு, சுசுரும - கேட்கப்பட்ட நாம், தீராணும் புத்திமானது வசநம், யே - ஆசாரியர், ந: - நமக்கு, தத் - கர்மமும் ஞாநமும், விசசக்ஷிரே - வியாக்யாநம் செய்தார்களோ அவர்களது இவ்வாகமம் பரம்பரையாக வந்தது என்பது பொருளாம். (10)

**विद्यां चाविद्यां च यस्तद्वेदोभय ँ सह ।**

**अविद्यया मृत्युं तीर्त्वा विद्यया ऽमृतमश्नुते ॥११॥**

ப-ள் —**विद्यां च** - தேவதா ஞாநத்தினையும், **अविद्यां च** - கர்மத்தினையும், **यः** - எவன், **तत्** - இந்த, **उभयं** - இரண்டினையும், **सह** - ஒன்ருக (ஒரு புருஷனல் அநுஷ்டிக்கத்தக்கது என்று), **वेद** - அறிகின்றனனே (அவன்), **अविद्यया** - அக்நிஹோத்திராதி கர்மத்தினல், **मृत्युं** - ஸ்வாபாவிக கர்ம ஞாநங்களை, **तीर्त्वा** - தாண்டி, **विद्यया** - தேவதாத்ம ஞாநத்தினல், **अमृतं** - தேவதாத்மபாவத்தினை, **अश्नुते** - அடைகின்ருன்.

சா-ம். எதனல் இங்ஙனமோ அதனல், வித்யாம் ச அவித்யாம் ச - தேவதா ஞாநமும் கர்மமும் என்பது பொருள். ய: தத் - இவ, உபயம் - இரண்டும், சஹ - கூடவே ஒரு புருஷனல் அநுஷ்டிக்கத்தக்கது (என்று), வேத - அறிந்த, அவனுக்கே. கிரமமாக ஏக புருஷார்த்த சம்பந்தமாம் என்று கூறப்படுகின்றது, அவித்யயா - அக்நிஹோத்ராதி கர்மத்தினல், மிருத்யும் - ஸ்வாபாவிக கர்மமும் ஞாநமும், மிருத்யு சப்த வாச்சியமான இரண்டையும், தீர்த்வா - தாண்டி, வித்யயா - தேவதா ஞாநத்தினல், அமிருதம் - தேவதாத்ம பாவத்தினை, அஶ்நுதே - அடைகின்ருன், எது தேவதாத்ம அடைவோ அதனையே அமிருதம் (என்று) கூறுகின்றனர். (11)

இப்பொழுது வியாகிருத அவ்யாகிருத உபாசனைகளின் சமுச்சய இச்சையால் ஒவ்வொன்றன் நிந்தை கூறப்படுகின்றது.

**अन्धं तमः प्रविशन्ति येऽसंभूतिमुपासते ।**

**ततो भूय इव ते तमो य उ संभूत्या ँ रताः ॥१२॥**

ப-ள்—ये - எவர்கள், असंभूतिं - பிரகிருதியை, उपासते - உபாசிக்கின்றனரோ, अन्धं - (அவர்கள்) குருட்டு, तमः - இருளை, प्रविशान्ति - அடைகின்றார்கள், ये उ - எவர்கள், संभूत्यां - (இரண்யகர்ப்பன் என்னும் பெயரையுடைய) கார்யப் பிரஹ்மத்தில், रताः - இச்சை யுள்ளவர்களோ, ते - அவர்கள், ततः - அதனினும், भूयः इव - மிகுதியான, तमः - இருட்டை, प्रविशन्ति - அடைகின்றார்கள்.

சா-ம். அந்தம் தம : பிரவிசந்தி, யே - எவர்கள், அசம்பூதிம் - சம்பவநம், சம்பூதி : அது எக்காரியத்திற்கோ அது சம்பூதி : அதனின் வேறு அசம்பூதி : பிரகிருதி : காரணம் அவித்யா அவ்யாகிருதம் எனப்பெய ரியது, தாம்—அதனை, அசம்பூதியை அவ்யாகிருதம் எனப்பெயருடையதை பிரகிருதியை காரணத்தை அவித்யையை காமகர்ம பீஜ பூதத்தை அதர்சந ஸ்வரூபத்தினை உபாசிக்கின்றார்களோ, தே - அவர்கள், அதன் அநுரூபமாகவே, அந்தம் தம : - அதர்சந ரூபத்தை, பிரவிசந்தி-அடைகின்றார்கள், தத: - அதனினும், பூய : - அதிகமான, தம : பிரவிசந்தி - இருட்டை அடைகின்றார்கள், ய உ சம்பூத்யாம் - (எவர்கள்) இரண்யகர்ப்பன் என்னும் பெயரினையுடைய கார்யப் பிரஹ்மத்தில், ரதா: - ரமிக்கின்றார்களோ. (12)

இப்போழுது இரண் டுபாசனைகளின் சமுச்சய காரணமான அவயவ பல பேதத்தினைக் கூறுகின்றார்.

अन्यदेवाऽऽहुः संभवादन्यदाहुरसंभवात् ।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥१३॥

பி-ள்—संभवात्-காரியப் பிரஹ்ம உபாசனையினின்றும், अन्यत् एव - (பலன்) வேறாகவே, आहुः - கூறுகின்றனர், असंभवात् - அவ்யாகிருத உபாசனையினின்றும், अन्यत् - (பலன்), வேறாகவே, आहुः - கூறுகின்றனர். इति - என்று, नः - எங்கட்கு, ये - எவர்கள், तत् - அந்த அவ்யாகிருத வியாகிருத உபாசனைகளின் பலன்களை, विचचक्षिरे - புகன்றார்

களோ, **धीराणां** - (அந்த) தீரர்களுடைய, **शुश्रुम** - (வசநம்) கேட்டிருக்கின்றோம்.

சா-ம். அந்யத் ஏவ - வேறாகவே, ஆஹு: - பலம் கூறுகின்றார்கள், சம்பவாத் - சம்பூதியான கார்யப் பிரஹ்ம உபாசனையால் அணிமாதி ஐஶ்வரிய லக்ஷணம் கூறப்பட்டது என்பது பொருள்.

அப்படியே, அந்யத் ஆஹு: அசம்பவாத் - அசம்பூதியான அவ்யாகிருதத்தான் அவ்யாகிருத உபாசனையால் எது கூறப்பட்டது அந்தம் தம: பிரவிசந்தி என்றும் பிரகிருதிலயம் என்றும் பௌராணிகர்களால் கூறப்படுகின்றது என்று கேட்கின்றோம். தீரர்களது வசநம் எவர் நமக்குக் கூறினர் வியாகிருத அவ்யாகிருத உபாசனையின் பலம் கூறினர் என்பது பொருள். (13)

எதனுல் இவ்வாறே அதனுல் சம்பூதி அசம்பூதி உபாசனைகளின் சமுச்சயம் ஏக புருஷார்த்தமாகலானும் பொருத்தமுடையதே எனக் கூறப்படுகின்றது.

**संभूतिं च विनाशं च यस्तद्वेदोभयं सह ।**
**विनाशेन मृत्युं तीर्त्वा संभूत्याऽमृतमश्नुते ॥१४॥**

ப-ள்—**संभूतिं च** - அசம்பூதியையும், **विनाशं च** - அவிநாசத்தினையும், **यः** - எவன், **तत्** அந்த, **उभयं** - இரண்டினையும், **सह** - கூடவே, **वेद** - (அநுஷ்டிக்கத்தக்கது) என்று அறிகின்றானே, **विनाशेन** - (அவன் அவிநாச ரூப) ஹிரண்ய கர்ப்ப உபாசனையினால், **मृत्युं** - ஐஶ்வரிய மற்ற அதர்ம காமாதி தோஷக் கூட்டமான மிருத்யுவை, **तीर्त्वा** - தாண்டி, **संभूत्या** - அசம்பூதியாகிய அவ்யாகிருத உபாசனையினால், **अमृतं** - பிரகிருதி லயத்தை, **अश्नुते** - அடைகிறான்.

சா-ம். விநாசேந - விநாச தர்மம் எந்தக் காரியத்திற்கோ அதற்குப் பெயராம். அந்தத் தர்மியோடு அபேதமாக விநாசம் என்று கூறப்படுகின்றது. தேந - அதனுல், அந்த உபாசனையினால் அனைஶ்வரியமும் அதர்ம காமாதி தோஷக் கூட்டமுமான மிருத்யுவை, தீர்த்வா - ஹிரண்யகர்ப்ப உபாசனையினால்

அணிமாதி அடைவு பலமாம். அந்த (உபாசனையி) னுல் அநைஸ்வரி யாதி மிருத்தியுவைத் தாண்டி, அசம்பூத்யா - அவ்யாகிருத உபா சனையினுல், அமிருதம் - பிரகிருதி லய லக்ஷணத்தினை, அஸ்நுதே - அடைகிருன், "சம்பூதிம் ச விநாசம் ச" என்னும் இடத்தில் அகர எழுத்து லோபத்தினுல் கூறப்பட்டது; பிரகிருதி லய பல சுருதி அநுரோதத்தால் என உணர்க. (14)

**हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।**
**तत्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥१५॥**

ப-ள்—**हिरण्मयेन**-தங்கமயம்போன்றதான, **पात्रेण**-பாத் திரத்தினுல், **सत्यस्य** - (ஆதித்ய மண்டலத்திலுள்ள) பிரஹ் மத்தினது, **मुखम्** - துவாரம், **अपिहितं** - மறைக்கப்பட்டிருக் கின்றது, **पूषन्** - சூரியனே!, **त्वं** - நீ, **सत्यधर्माय** - சத்திய தர்ம முடையதனை உபாசிக்கும் சத்ய தர்ம முடைய எனக்கு, **दृष्टये**-சத்திய ஸ்வரூபத்தினை அறியும் பொருட்டு, **तत्** - அந்த மறைப்பை, **अपावृणु** - நீக்கி விடு.

சா-ம். மாநுஷ தைவ வித்த சாத்தியமான பலம் சாத்திர லக்ஷ ணம் பிரகிருதி லய பரியந்தமேயாம். இவ்வளவே சம்சார கதியாம். அதன் பின் முற்புகன்ற "ஆத்மைவாபூத் விஜாநத:" (7வது மந்திரம்) என்னும் சர்வாத்ம பாவமே சர்வ ஏஷண சந்யாச ஞாந நிஷ்டா பலம் (உண்டாகின்றது). இவ்வாறு இரு பிரகாரமாக பிர விருத்தி நிவிருத்தி லக்ஷணமான வேதார்த்தம் ஈண்டு விளக்கப் பட்டது.

ஆண்டு பிரவிருத்தி லக்ஷண விதி நிஷேத ரூப வேதார்த்தத்தின் முழுமையின் விளக்கத்தில் பிரவர்கியாந்தமான (கர்மத்தினைக் கூறும்) பிராமண (பாக)ம் உபயோகமாம், நிவிர்த்தி லக்ஷணத்தினை உடைய வேதார்த்தத்தின் விளக்கத்தில் அதினினும் மேல் உள்ள பிரஹ தாரண்யகம் உபயோகமாம். அவற்றுள் நிஷேகம் (சாந்தி கலியாணம்) முதல் ஸ்மசாந வரையில் உள்ள கர்மங்களைச் செய்து கொண்டு அப ரப் பிரஹ்ம விஷய வித்தையோடு கூட எவன் ஜீவிக்க இச்சிக்கின்ற னே, அது "வித்யாம் ச அவித்யாம் ச யஸ்தத் வேதோபயம்சஹ, அவி

த்யயா மிருத்யும் தீர்த்வா வித்யயாऽமிருதமஶ்நுதே" என்று (12-வது மந்திரத்தில்) கூறப்பட்டிருக்கின்றது.

அதன்கண் எந்த மார்க்கத்தால் அமிருதத் தன்மையினை அடைகின்றான் எனின் கூறப்படுகின்றது. "தத் யத் தத் சத்யம சௌ ஸ ஆதித்யோ" எவன் இந்தச் சூரிய மண்டலத்தில் இருக்கிற புருஷனோ, எவன் இந்த வலது கண்ணில் உள்ள புருஷனோ, இவ் விரண்டும் சத்யம் பிரஹமம் (என்று) உபாசிப்பவனாய் எவன் புகன்ற கர்மங்களைச் செய்கின்றனனோ, அவன் மரண காலம் வரும் போது தனது அடைவின் வாயிலாய் சத்யாத்மாவை யாசிக்கிறான்.

ஹிரண்மயேந பாத்ரேண - ஹிரண்மயம் போல, ஹிரண் மயம்-ஜோதிர் மயம் எனப் பொருளாம். தேந பாத்ரேண - அபிதாந (மறைப்பு) ரூபத்தால், சத்யஸ்ய ஏவ - ஆதித்ய மண்டலத்தில் உள்ள பிரஹ்மத்தினது, அபிஹிதம் - மறைப்புச் செய்யப்பட்டிருக்கின்றது, முகம் - துவாரம், ஹே, பூஷந் ! - சூரியனே ! த்வம் - நீ, தத் - அந்த மறைப்பை, அபாவ்ருணு - விலக்குதி, சத்ய தர்மாய - உனது சத்தியத்தினை உபாசித்தலால் சத்யம் தர்மம் எந்த எனக்கு, அந்த நான் சத்திய தர்மர்களாய, தஸ்மை - என்பொருட்டு, அல்லது எதார்த்த ரூப தர்மத்தை அநுஷ்டிப்போர், த்ருஷ்டயே - உனது சத்யாத்மாவின் உபலப்தியின் பொருட்டு. (15)

**पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य व्यूह रश्मीन्समूह ।**
**तेजो यत्ते रूपं कल्याणतम तत्ते पश्यामि योऽसावसौ पुरुषः**
**सोऽहमस्मि ॥१६॥**

ப-ள்—**पूषन्** - ஹே சூரியனே !, **एकर्षे** - ஹே முக்கியமாய்ச் செல்வோனே !, **यम** - ஹே எல்லாவற்றையும் நடத்துவோனே !, **सूर्य** - ஹே ரஸ்மிகளையும் பிராணன்களையும் ரஸங்களையும் கவர்வோனே !, **प्राजापत्य** - ஹே பிரஜாபதி மைந்தனே !, **रश्मीन्** - (உனது) கிரணங்களை, **व्यूह** - விலக்குக, **तेजः** - (உனது) தாப முடைய ஜோதியை, **समूह** - ஒடுக்குக. **ते** - உன்னுடைய, **यत्** - எம், **कल्याणतमम्** - மிகவும் அழகுடைய, **रूपं** - ஸ்வரூபமாகிய, **तत्** - அதனை, **ते** - உன்

னுடைய (பிரசாதத்தினுல்), **पश्यामि** - பார்க்கின்றேன், **यः** - எவன், **असौ** - ஆதித்ய மண்டலத்தில் உள்ள, **पुरुषः** - புருஷனே, **सः** - அவனே, **असौ** - இந்த, **अहं** - நானுக, **अस्मि** - இருக்கிறேன்.

சா-ம். ஹே பூஷந், ஜகத்தைக் காப்பாற்றுதலின் பூஷா சூரியன், அங்ஙனமே, ஏக ஏவ - ஒருவனே, ரிஷயதி-செல்கின்ருன் ஆகலின் ஏகர்ஷி: - ஹே ஏகர்ஷே !, அங்ஙனமே, எல்லாவற்றையும் நன்கு விதித்தலின், யம: - ஹே யம! அங்ஙனமே, ரஶ்மிகளையும் பிராணன்களையும் ரஸங்களையும் ஸ்வீகரித்தலின் சூரியன், ஹே சூரியனே !, பிராஜாபத்ய : - பிரஜாபதியினின்றும் பிறந்தவன், ஹே பிரஜாபதியே!, ரஶ்மீந் : - தனது கிரணங்களை, வ்யூஹ - விலக்குக, சமூஹ - ஒன்று செய்க, உபசம்மரிக்குக, தே - உனது, தேஜ: - தாபம் செய்யும் ஜோதி, யத் தே - (எது) உனது, ரூபம் - (ஸ்வரூபம்), கல்யாண தமம் மிகுந்த சோபையுடையது, தத் தே - (அது) உனது ஆத்மாவின் பிரசாதத்தினுல், பஶ்யாமி - பார்க்கிறேன். மற்றும், நான் உன்னை வேலைக்காரன் போன்று யாசிக்க வில்லை. ய :- எவன், அசௌ - ஆதித்ய மண்டலத்தி லிருப்பவனே, வியாஹ்ருத்யவயவனே, புருஷ : புருஷாகாரத்தால், அல்லது, இந்தப் பிராண புத்தி ரூபத்தினுல் சமஸ்த ஜகத்தும் பூரிக்கப்பட்டிருத்தலின் புருஷன், அல்லது புரியி (சரீரத்தி) ல் இருப்பதனுல் புருஷன், அந்த நான் ஆகிறேன். (16)

**वायुरनिलममृथेदं भस्मान्त ँ शरीरम् ।**
**ॐ क्रतो स्मर कृत ँ स्मर क्रतो स्मर कृत ँ स्मर ॥१७॥**

ப-ள்—**अथ** - இப்பொழுது, **वायुः** - (மரணமாகும் எனது) பிராணன், **अनिलं** - சர்வாத்மபாவமான வெளி வாயு ரூப, **अमृतं** - சூத்திராத்மாவை (அடைக), **इदं** - இந்த, **शरीरं** - சரீரம், **भस्मान्तं** - சாம்பலை முடிவாக உடைத லாகுக, **ओं** - ஓம், **क्रतः** - ஹே சங்கற்ப ரூப அக்நியே, **स्मर** - (நினைக்கத் தக்கவற்றை) நினைக்குக, **कृतं** - செய்தவற்றை, **स्मर** - நினைத்துக் கொள்க, "**क्रतः स्मर कृतं स्मर**-" இந் நான்கு பதங்களும் மீண்டும் கூறியது ஆதரம் உடையதனைக் காட்டுகின்றது.

3041

சா-ம். அத - இப்பொழுது மரணமாகும் எனது, வாயு: - பிராணன், அத்யாத்மபரிச்சேதத்தினை விட்டு அதிதைவதா ரூப சர்வாத்மபாவ, அநிலம் அமிருதம் - சூத்திராத்மாவினை அடைகின்றது என சொல் லெச்சம் கொள்க. ஞாந கர்மங்களால் சமஸ்காரம் செய்யப்பட்ட இந்த லிங்க (சரீர)ம் உத்கிராந்தி அடைக என உணர்க; மார்க்க யாசநா சாமர்த்தியத்தால். அத - பின், இதம் சரீரம் - அக்நியால் ஆகுதி செய்யப்பட்டு, பஸ்மாந்தம் - சாம்பலை முடிவடைதல் ஆகுக, ஓம் என உபாசனையின்படி ஓம் பிரதீக ரூபமாகலின் சத்ய ரூப அக்நி எனப் பெயரியன்றதனை பிரஹ்மத்தினோடு அபேதமாகக் கூறப்பட்டது. ஹே க்ரதோ - சங்கற்ப ரூப, ஸ்மர - எனக்கு எது நினைக்கத்தக்கதோ அதனது இக்காலம் தயாராக இருக்கிறது அதனால் நினைக்குதி. இது காலபரியந்தம் செய்தவற்றை, ஹே அக்நியே, ஸ்மர - என்னால் எது பால்யம் முதல் அநுஷ்டிக்கப்பட்ட கர்மம் அதனை நினைக்குதி, " கிருதோ ஸ்மர கிருதம் ஸ்மர " என மீண்டும் உள்ள வாக்கியம் ஆதரப் பொருளுடையதாம். (17)

மீண்டும் வேறு மந்திரத்தினால் மார்க்கம் யாசிக்கப்படுகின்றது.

**अग्ने नय सुपथा राये अस्मान्विश्वानि देव वयुनानि विद्वान् ।**
**युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नमउक्तिं विधेम ॥१८॥**

इत्युपनिषद् ॥

इति वाजसनेयसंहितोपनिषत्संपूर्णा ॥

ओंपूर्णमदः शिष्यते ॥

**ओं शान्तिः शान्तिः शान्तिः ॥**

ப-ள் — **अग्ने** - ஹே அக்நியே, **अस्मान्** - எங்களை, **राये** - கர்ம பல போகத்தின் பொருட்டு, **सुपथा** - உத்திர மார்க்கத்தினால், **नय** - கொண்டுபோம், **देव** - ஹே தேவனே !, **विश्वानि** - சமஸ்தமான, **वयुनानि** - கர்மங்களை, அல்லது பிரஞ்ஞைகளை **द्विन्** - அறிந்த நீர், **अस्मत्** - எம்மனின்றும், **जुहुराणं** - வஞ்சனை

ரூப குடிலமான, **एनः** - பாபத்தினை, **युयोधि** - விநாசம் செய்க, **ते** - உனக்கு **भूयिष्ठां** - மிகுந்த (கைங்கர்யம் செய்ய இப்போது நாங்கள்) சமர்த்துடையவர்கள் அன்ரும், **ते** -உனக்கு, **नमः** - நமஸ்கார, **उक्तिं** - வசநத்தினை, **विधेम** - (நமஸ்காரத்தினுல் கைங்கர்யம்) செய்வாம்.

சா-ம். ஹே!, அக்நே - அக்நியே, நய - அடைவி, சுபதா - நல்வழியால், சுப்தா என்னும் விசேஷணம் தக்ஷிணமார்க்க நிவர்த்தியின் பொருட்டாம். போக்கு வருத்து லக்ஷண முடைய தக்ஷிண மார்க்கத்தினின்றும் விராக முடையோன் நான் அதனுல் உன்னை யாசிக்கின்றேன் மீண்டும் மீண்டும் போக்கு வரத் தின்றிய நன் மார்க்கத்தினை அடைவி. ராயே - தநத்தின் பொருட்டு; கர்ம பல போகத்தின் பொருட்டு என்பது பொருளாம். அஸ்மாந் - புகன்ற தர்ம பல விசிஷ்டத்தினை, விப்வாநி - எல்லாவற்றையும், ஹே தேவ!, வயுநாநி - கர்மங்களை; அல்லது பிரஞ்ஞாநங்களை, வித்வாந் - அறிந்து, மற்றும், யுயோதி - வியோஜிக்க; விநாசம் செய்க, அஸ்மத் - நமது, ஜுஹுராணம் - குடிலம்; வஞ்சந ரூபம், ஏந: - பாபம், அதனுல் நாங்கள் விசுத்தர்களாய் இஷ்டத்தினை அடைவோம் என்பது அபிப்பிராயம். மற்றும், நாங்கள் இப்பொழுது உனக்கு, பூயிஷ்டாம் - மிகுதியாக, சேவை செய்யச் சக்தர்கள் அல்ல. தே - உன்பொருட்டு, நம உக்திம் - நம்ஸ்கார வசநத்தினை, விதேம - நமஸ்காரத்தினுல் சேவை செய்வாம் என்பது பொருளாம். "அவித்யயா மிருத்யும் தீர்த்வா வித்யயாமிருதமப்நுதே; விநாசேந மிருத்யும் தீர்த்வா சம்பூத்யாமிருத மப்நுதே" என்பதைக் கேட்டுச் சிலர் சம்சயத்தினை அடைகின்றனர். அதனுல் அதன் நிராகரணத்தின் பொருட்டுச் சங்கேக்ஷபமாக விசாரம் செய்வாம்.

ஆண்டு எந்நிமித்தமான சம்சயம் எனின் கூறப்படுகின்றது. வித்யா சப்தத்தினுல் முக்கியமான பரமாத்ம வித்தையே என் கிரகிக்கப்பட வில்லை அமிருதத்வமும் (என் கிரகிக்கப்பட வில்லை), அற்றேல், கூறிய பரமாத்ம வித்தைக்கும் கர்மத்திற்கும் விரோதம் இருத்தலின் சமுச்சயம் பொருந்தாது. சத்யம், விரோதமோ அறியப்பட வில்லை. விரோத அவிரோதங்கள் சாஸ்திரப் பிரமாணம் உடையதாகலின். எங்ஙனம் அவித்யா அநுஷ்டாநமும் வித்யா உபாசநமும் சாஸ்திரப் பிரமாணம் உடையதோ அங்ஙனமே அதன் விரோத அவிரோதங்களும் ஆம். எங்ஙனம் "எல்லாப் பூதங்களை

யும் கொல்லற்க” எனச் சாஸ்திரத்தினல் அறியப்பட்டது மீண்டும் சாஸ்திரத்தினலேயே “அத்வரே பசும் ஹிம்ஸ்யாத்” எனப் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு வித்தைக்கும் அவித்தைக்கும் ஆகும். வித்தை கர்மங்கட்குச் சமுச்சயம் இன்று; “தூரம் ஏதே விபரீதே விஷூசி “அவித்யாயா ச வித்யா” என்னும் சுருதியால். “வித்யாம் ச அவித்யாம் ச” என்னும் வசநத்தினல் அவிரோதம் என்று கூறற்க; ஏது ஸ்வரூப பல விரோதம் இருத்தலின். வித்தை அவித்தை விரோத அவிரோதங்களின் விகற்பம் பொருந்தாமையின் சமுச்சயம் விதித்தலின் அவிரோதமே என்று கூறற்க; கூடவே சம்பவித்தல் பொருந்தாமையின். வித்தை அவித்தைகள் கிரமமாக ஒரு ஆசிரயத்தில் உண்டாம் என்னற்க; வித்தை உத்பத்தியாங்கால் அவித்தை அஸ்தமாயினமையின் அதன் ஆசிரயத்தில் அவித்தை பொருந்தாமையின். அக்நி உஷ்ணப் பிரகாசம் என்னும் விஞ்ஞாநம் உத்பத்தியாகுமிடத்து எதன் ஆசிரயத்தில் அதன் உத்பந்நமோ அந்த ஆசிரயத்திலேயே அக்நி சீதம் அப்பிரகாசம் என அவித்தையின் உத்பத்தி உண்டாகாது; சமுச்சயமும் அல்லது அஞ்ஞாநமும் உண்டாகாது. “யஸ்மிந் சர்வாணி பூதாந்யாத்மைவாபூத் விஜாநத:, தத்ர கோ மோஹ: க: சோக ஏகத்வமநுபஸ்யத:” எனச் சோக மோஹாதி அசம்பவ சுருதி உள வாகலின். அவித்தை பொருந்தாமையின் அதனை உபாதாநமாகக் கொண்ட கர்மத்திற்கும் பொருத்தம் இன்மை கூறியிருக்கிறேம். “அமிருதமஸ்நுதே” என்பது ஆபேக்ஷிகம் அமிருதம் ஆம். வித்யா சப்தத்தினல் பரமாத்ம வித்தை கிரகிக்கப்படில் “ஹிரண்மயேந” என்பதாதியால் துவார மார்க்காதி யர்சநம் பொருத்தம் இன்மையாம். அதனல் உபாசனையோடு சமுச்சயமாம்; பரமாத்ம விஞ்ஞாநத்திேடு அன்ரும். என்று எங்ஙனம் நம்மால் வியாக்கியாநம் செய்யப்பட்டதோ (அதுவே) மந்திரங்கட்குப் பொருளாம் என உணர்க. (18)

இங்ஙனம் ஸ்ரீ கோவிந்த பகவத் பூஜ்ய பாத சிஷ்ய பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய ஸ்ரீ சங்கர பகவான் செய்த வாஜசநேய சம்ஹிதோபநிஷத் பாஷ்யம் சம்பூரணம்.

“ஓம் தத் ஸத்.”

---